DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.94/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | பவளக்கொடி (Lw -3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

(எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

முதல் விசாரணை **Date : 15.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் அனைத்து மகளீர் காவல்நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.02.2025ம் தேதி நான் நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் நான் தலைமை காவலராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது தலைமை காவலர் திரு.சிவராஜ் நிலையம் ஆஜராகி கொடுத்த தனியறிக்கையின் பேரில் நிலைய குற்ற எண்.56/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act - ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை கனம் நீதிமன்றத்திற்கும் மற்றொரு நகலை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு, ஒரு நகல புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். (முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கானது எந்த ஒரு தனிநபரின் புகாரின் அடிப்படையில் போடப்பட்ட வழக்கு இல்லை என்றால் சரிதான். எனக்கு கிடைக்கப்பெற்ற தனியறிக்கையில் தனி நபர்கள் யாரும் எதிரியிடம் இருந்து மதுபான பாட்டில்களை வாங்கி சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னர் முதற்கட்ட விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கைப்பற்றப்பட்ட பாட்டில்களின் மதிப்பு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக கொடுக்கப்பட்ட தனியறிக்கையின் பேரில் நான் சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**